| காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023 | பதிவெண் |
|---|---|
| **XI - வரலாறு** | |
| கால அளவு : 3.00 மணி | மதிப்பெண்கள் : 90 |

## பகுதி - அ

***சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*** 20x1=20

1. பழங் கற்காலக் கருவிகள் முதன்முதலில் ________ இல் அடையாளம் காணப்பட்டன.
   அ) 1860 ஆ) 1863 இ) 1873 ஈ) 1874
2. மெஹர் கார் ________ பண்பாட்டுடன் தொடர்புடையது.
   அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்
   இ) இடைக் கற்காலம் ஈ) செம்புக் காலம்
3. ஆதிச்சநல்லூர் ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.
   அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்
4. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.
   i) சேனானி - படைத்தளபதி
   ii) கிராமணி - கிராமத் தலைவர்
   iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
   iv) புரோகிதர் - ஆளுநர்
   மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது
   அ) i ஆ) ii இ) iii ஈ) iv
5. வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ________ ஆகும்.
   அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு
6. ________ நல்ல நிர்வாகம் பற்றி வழிகாட்டும் நூல்
   அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ரா ராட்சசம்
7. ________ ராஜ சூய யாகத்தை நடத்தியவர்.
   அ) பெருநற்கிள்ளி அ) முதுகுடுமி பெருவழுதி இ) சிமுகா ஈ) அதியமான்
8. சாக சத்ரப்களில் மிகவும் புகழ்பெற்றவர் ________.
   அ) மொக ஆ) ருத்ர ராமன் இ) அஸிஸ் ஈ) யசோவர்மன்
9. ________ பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
   அ) அரிக்கமேடு ஆ) ஆதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்
10. ________ என்ற சீனப் பயணி பொ.ஆ.ஐந்தாம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.
    அ) இட்சிங் ஆ) யுவான்-சுவாங் இ) பாஹியான் ஈ) வாங்-யுவான்-சீ
11. ________க்குக் கவிராஜா என்ற பட்டம் அளிக்கப்பட்டது.
    அ) முதலாம் சந்திரகுப்தர் ஆ) சமுத்ரகுப்தர்
    இ) இரண்டாம் சந்திரகுப்தர் ஈ) ஸ்ரீ குப்தர்
12. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை ________ இன் அறிவுரையின்படி ஏற்றுக்கொண்டார்.
    அ) கிரகவர்மன் ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்
    இ) பிரபாகர வர்த்தனர் ஈ) போனி
13. ________ என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.
    அ) குந்தலா ஆ) பானு இ) அவந்தி ஈ) சர்வாகதா
14. காம்போஜம் என்பது நவீன ________.
    அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா
15. ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு ________.
    அ) அத்வைதம் ஆ) விசிஷ்டாத்வைதம் இ) சைவ சித்தாந்தம் ஈ) வேதாந்தம்
16. கஜினி மாமுது, இந்தியாவுக்குள் ________ முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.
    அ) 15 ஆ) 17 இ) 18 ஈ) 19
17. மம்லுக் என்ற பெயர் ஒரு ________க்கான அரபுத் தகுதிச் சுட்டாகும்.
    அ) அடிமை ஆ) அரசர் இ) இராணி ஈ) படை வீரர்
18. பாலம் பவோலி கல்வெட்டு ________ மொழியில் இருக்கிறது.
    அ) சமஸ்கிருதம் ஆ) பாரசீக மொழி இ) அரபி ஈ) உருது



Scanned with OKEN Scanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

19. ________ பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.
அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்
20. பொ.ஆ.800 ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு ________ நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகிறது.
அ) மத்திய அரசு ஆ) கிராமம் இ) படை ஈ) மாகாணம்

## பகுதி - ஆ

*ஏவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 30 கட்டாய வினா)* 7x2=14

21. ஹோமினின் கருத்து - சிறுகுறிப்பு வரைக.
22. பெருங்குளம் - சிறுகுறிப்பு வரைக.
23. வேத கால இலக்கியங்களை வரிசைப்படுத்துக.
24. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
25. மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கியச் சான்றுகள் பற்றிச் சிறு குறிப்பு தருக.
26. பண்டமாற்று முறையை விளக்குக.
27. 'யவன' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
28. அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்து கூறுக.
29. தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.
30. ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - இ

*ஏவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 40 கட்டாய வினா)* 7x3=21

31. சிந்து நாகரிகம் நிலவிய பகுதியின் எல்லைகளை குறிப்பிடுக.
32. மேய்ச்சர் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
33. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
34. இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களை குறிப்பிடுக.
35. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்.
36. மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாது?
37. குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
38. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்.
39. புகழ்பெற்ற சைவ மூவர்கள்.
40. மாலிக் காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.

## பகுதி - ஈ

*அனைத்து வினாக்களுக்கும் விடையளி* 7x5=35

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக. *(அல்லது)*
ஆ) பௌத்த மதத்திற்கு பாலர்கள் ஆற்றிய பங்களிப்பு என்ன?
42. அ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க. *(அல்லது)*
ஆ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.
43. அ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக. *(அல்லது)*
ஆ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?
44. அ) "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்" - விவாதிக்கவும். *(அல்லது)*
ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.
45. அ) ராஷ்டிரகூடர்களின் சிறப்புகள் யாவை? *(அல்லது)*
ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டிடக்கலை மேன்மைகளை விளக்குக.
46. அ) அலா-உத்-தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் விவாதிக்கவும். *(அல்லது)*
ஆ) குப்தப் பேரரசின் ஆட்சிப் பகுதி இந்திய வரைபடத்தில் ஐந்து இடங்களைக் குறிக்கவும்.
1. அயோத்தி 2. மதுரா 3. வல்லபி 4. பிரயாகை 5. உஜ்ஜையினி
47. அ) சோழர்கால கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக. *(அல்லது)*
ஆ) டெல்லி சுல்தானியர்களின் ஆட்சியில் நடந்த நிகழ்வுகளை *காலக்கோடு* வரைந்து காட்டுக.



Scanned with OKEN Scanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com